# சுகமரணபீஷ்டம்

இயற்றியது

ஸ்ரீமத். அ. சதாசிவம்பிள்ளை

223.2
2 சதாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

223.2
SAT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES

RARE BOOKS SECTION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகமரணபீஷ்டம்

இஃது

காலஞ்சென்ற உதயதாரகைப் பத்திராதிபர்

ஸ்ரீ. மத். அ. சதாசிவம்பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு

அவர் குமாரர்களாற்

பிரசரிக்கப்பட்டது.

---

# SUKA MARANAPEESHDAM,

A POEM BY THE LATE

MR. J. R. ARNOLD.

Tamil Editor, Morning Star.

[redacted]?

Published by his sons,

S. T. & S. C. ARNOLD

JAFFNA
Strong and Asbury, Printers.
1898.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. 15933

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்முகம்.

---

சாவாது தப்பும் திறனுடையார் உலகினில்லை. மண்மேல் முளைத்த பூண்டுகள் மண்மேல் மடிதல் இயற்கையானாற்போலப் "பிறந்தவர் இறத்தறிண்ணமை". சாவை விலக்கல் கூடாதாயினும் அதனோடு சாரும் வருத்தத்தால் விலக யாரும் ஆசிப்பர். வெயிலால் வருந்துவோர் நிழல் தேடிப்போதல் இயல்பானாற்போல நோயால் வருந்துவோர் சுகத்தை ஆசித்தல் இயல்புக்கு மாறல்ல.

பலதரமும் பலர்க்கு நேரிட்ட நோய் வருத்தங்களைக் கண்ணாரக் கண்டும் காதாரக் கேட்டுமிருக்கும் நாம் நமக்கும் அவை வாராதிருக்கவேண்டுமென்றும் பேராசை கொண்டோமாய் இச்சிறுபாடலைச் செய்யமுயன்றோம். என்பதனால் இப்பாடல் சுகமரணந்தருமென்றும் வாதையைத் தணிக்குமென்றும் துணியோம். ஆயின் அப்பெயர்ப்பட்ட சமயங்களில் இதனைப் பாடினாற் பிறர் பாடக் கேட்டாற் சற்றே ஆறுதலுஞ் சுகமுமாகுமென்று நம்புகின்றோம். அந்நோக்கங்கொண்டே நோய்வாய்ப்படுவோர் எவர்க்கும் உபயோகமாமென்ற நம்பிக்கையால் இதை அரங்கத்தில் விடுக்கின்றோம்.

நோயினால் வருந்தும் ஓரேழையின் நிலைமையைப் பாவனைபண்ணியும் எம்மிற் சார்த்தியும் சுகசீவியாயிருக்கும் போதே இதனைப் பாடினம். இதிற் சுட்டப்பெற்ற குறிப்புகள் பல கைமெய்யாய் நடந்தேறியனவைகள். சில பார்க்கும் நடந்தேறக்கூடியனவைகள். ஓர்போது நம்மிலும் முற்றாய் நடந்தேறுமோ யாரறிவார்?

எப்படியும இப்பாடல் எம்மனோர்க்குப் பிரயோசனமும் எம்மை ஆட்கொண்டார்க்குப் புகழுமாய் முடிகவென்று இரட்சாமூர்த்தியின் பாதாரவிந்தத்தில் இதனை விவைத்தோம்.

இங்ஙனம்,
ஆக்கியோன.

Manippay,
Nov. 1. 1892.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகமரணாபீஷ்டம்.

## காப்பு.

சீரார் சுகமரணாபீஷ்டமதிற் சிந்தனைகொண்
டோரார்விருத்தங்களீரறுபான்—ஆராய்வாய்ச்
சொல்ல விரட்சாமூர்த்தி தூயாவென் யேசுபரா
வல்லமைதா நல்லருள்செய் வா.

## நூல்.

திருமறைக்குத் தாரக[1]மாய்ச் சித்தாய்த் தீயோர்
தெரிசனத்துக் கரியானாய்ச் செகேசனாகி
அருவுருவா யண்டபகிரண்டங்கொள்ளா
வானந்தப்பொருளாகி யன்பருள்ளப்
பெருவெளியிலமர்ந்தவனே பிறந்ததாதி
பேசுமிதுபரியந்தம் பிறங்குமின்றன்
அருடுணையா யினிதமர்ந்தே னினிநோயாட்டி
யலைக்கமுன்று சுகமரணமமுதம்[2]யேசே. க

அகிலமதிற் பத்தருடன் பத்தராதி
யானபலபேதகாரரிதாம் பன்னோய்
மிகவருத்தத் தாங்கு பலமிலாது வெம்பி
விதம்விதமா யிறந்தகதை கண்ணம்வீழ
அகமயர்ந்தே னங்கமெலா முதறியாட
வருள்ளை சுகமரணமென வலறிக்கேட்டேன்
தருகினது இருவுளம்போ லதைமுன்றந்து
தப்பாநன் மோக்கந்தா தந்தாய்யேசே. உ

---

1. ஆதாரம். 2. மோக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பலதன் கம்பமுற்ற காக்கைபோலக்
கரைகாணு தலைக்கலைந்து கத்திக்கத்தி
இப்புவியின் பொருளனைத்து மனம்போயெய்த்த
ஏழையென்ற னெஞ்சியவாறனை யீர்த்துத்
தப்பாதோ படிமைகொளச் சாபியாமற்
தருத்த சுகமரணமது தந்துபின்னர்
ஒப்பிலாப் பரகதியுறுதவாய் தொண்ட
ருளமலராசனம் பிரியா துறையும்யேசே. ௬

பரியங்கம்[1] விட்டிறங்கிப் பாரிற்சாய்ந்து
பக்குவமாயுடன் முடிந்த பத்தனுண்டு
அகி[2]யுடன்காய்கறிவாங்கி யாக்கச்சொல்லி
அசனமுண முன்னிறந்த வயலாறுண்டு
எரிபிரமபத்திரத்தைக் கரத்திலேற்றங்
கிருந்தசைவாய்ச் சுருட்டுமுனமிறந்தாருண்டு
உரிமைபெறச் சுகமரண முவர்போலெற்கு
முதவுக முத்திநியடருள்க வொப்பில்யேசே. ௭

தோலிருக்கச் சுளையிழந்த பழம்போற்றன்னும்
துவக்குடனென்புகளொழியத் தன்றமேதை[4]
பாலதொக்கு நிணக்குருதியாம் பல்பண்டம்
பதனழியப் பற்றழியப் பாழேயாக்கிச்
சாலவெனதுடம்பை யிந்த்ரசாலக்காரர்
சாலஞ்செய்வதுபோ லேய்த் தாக்காவண்ணம்
எவருஞ் சுகமரணமீந்தே யின்ப
விடமாங் கைவல்லியத்தி லிருத்தாய் யேசே. ௮

தொண்டொண்டொடென்றுபறை காதைத் தாக்கத்
தஞ்சினர்யாவரெனத் துருவும்போது
மண்டுபிணி யொன்றுமின்றி யுறக்கம்போல
வாகாய் நேற்றிருந்தவர்தா மின்றுமாய்ந்தார்

1. கட்டில். 2. அரிசி. 3. தோல். 4. இறைச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டறிந்திரென்றார் மற்றெனையோர்கன்றிக்
கடும்வாதை கடிதனிற்குக் கருத்தோர்பார்த்தோர்
உண்டுபிறொன்றிருக்க வொரு ரோகமின்றி
உலவு சுகமரணபரமுதவெல்லையேசே. ௬

அன்பரென்று சொன்னசொற்க ளிலையாமுன்னர்த்
தஞ்சினுறெனவுடனே பிறக்க அய்தாம்
இன்பமொழியென்றனக்கு மிசைதந்தோ
யானெனுநாட் பிணிவருந்த விருக்கிறந்தால்
உன்றனக்கென் பெருமையையா வுரைத்திசொல்லு
மொருதினம்போற் பஃதினங்க ளுழலவேண்டேன்
வன்றிறலார் சுகமரணம்வழங்கி மோட்ச
வாழ்வருதா வமலாவென் மகிபாயேசே. ௭

அண்ட[1]மதையுடைத்தெழும்பி யகல்குஞ்சேபோல்
அழியாயவுடம்பிசனை யகலத்தள்ளிக்
கொண்டு பறந்திடகிபிடர்தோறுங் குன்றுக்
குணமான வாயத்தல் குறித்திருக்க
மண்டலத்தி லிறுஞ்சின்னுள் வதிவையென்று
வைத்தருநோய் பலவையுடன் வருவித்திட்டாற்
தொண்டனென் குறைகின்மேற்சொல்லேனுவாய்ப்பச்
சுகமரண சுவர்க்கந்தா சுரேசா யேசே. ௮

எக்கலியின் கரைகண்டேன் தெளிவொன்றின்றி
யாவியுருப்பார்த்திடு பேய்க் குருடரேய்ப்பத்
தக்கபடி நினையுணரார் சாலச்சாலத்[2]
தனிவிழ்ந்து சிக்கியதிற் சலனப்பட்டு
விக்கலெடுத் துள்ளழிந்து வீவேனுகின்
மின்றுரு முபயாரவிக்நமேவாச்
சக்கிரி[3]சக்கரமென வுட்டளம்புவேனு
தருசுசுகமரண சிவஞ்சயம்பேயேசே. ௯

1. முட்டை. 2. கண்ணி. 3. குயவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்க[1]ரொன்று சீராடுமேழைதன்னை
இழுத்துப்போயென்பைமுறித் திரக்கமின்றிக்
கொடுங்கொலைக்குத் துணிந்ததெனக் குரூரரோசன்
கூசாதுன்னருட்டுறையிற் குளிக்குமென்னை
அடும்படி யுத்தரவுகொடுக்காம லன்றோ
வகங்கார மதனையொறுத் தடக்கியன்பின்
தடங்கரையிற் சேர்ப்பை சுகமரணஞ்சாரத்
தயைபுரிவை மோக்கதலந் தருவையேசே.

அரசனிலாநகரார்போ லைந்துவேடர்
அடக்கமென்பதின்றி மிக்க கலக்கமாற்றிப்
பாபரென்று தம்பாட்டி லரசுபண்ணப்
பரநோக்காப் பாவியிவன் பார்மேற்பட்சம்
இரவுபகல்வைத்தலைந்தா னலைந்தானென்னை
எண்ணாதானெனமுனியாய் விண்ணோரேத்தப்
பரவுசுகமரணமொ டின்பதவிதந்து
பண்பாயென்றனையளிப்பை பரனேயேசே. ௧௧

காத்திர[2]த்தை மிகவருத்திக் கான்மேலோச்சிக்
கருதரியநிட்டைசெய்து காலாகாலத்
தோத்திரங்கள் வழுத்திநின்று கரத்தைத்தூக்கித்
தொழுமவர்க்குமரியானாய்த் தூயவுள்ளப்
பாத்திரத்துளன்புநிறைந் தவர்கள்பார்க்கும்
படியெளிதாய்த் தரிசனமீ பகவானேநோய்
வேத்திர[3]த்தாலெனைத்தடியாய் விரைவிற்றாராய்
விழைந்த சுகமரணமுத்தி விமலாயேசே. ௧௨

நினைத்துதிக்கு நாவதிலே னின்னைநெஞ்சம்
நிறுத்துகிலேனாயினு முண்மூர்ச்சைநீடத்
தினைத்துணையு மன்னமயவுடலுட் செல்லாத்
தேய்ந்துபலக்கேடுவரச் செயாதே தேவென்

1. முதலை. 2. உடல். 3. பிரம்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தொழுங்கை மடங்கவிடா யுற்றார்மற்றோர்க்
கொரு பிரியாவிடையேனு மோதவைப்பாய்
எனைத்தனிக்கவிடாது சுகமரண மீவை
யேறதிடு தேவலந்[1]தருவை யேந்தால்யேசே. ௧௩

சக்கிரி[2]செய் பலநாண்மட்கலங்கடம்மைத்
தண்டதரன் கணமொன்றிற் றகர்ப்பானென்று
இக்கு[3]வாரிசைத்திவார் பல்லாண்டெண்ணி
இன்பமுறப் பூமிமுடித் திலங்கவைத்த
விக்கிரகந்[4]தனையுடைக்க விதிதரோக
மிகநெருங்கிச் சண்டைசெயில் விழைவாட் டீதின்
சத்[5]தினுக்குக்குளிர்ச்சியதாய்த் தரிசிப்பாயோ
தக்கசுகமரணசித்தி தாதா யேசே. ௧௪

ஆறலைக்குங் கள்வரொப்பா ரைந்துகள்வ
ரடுத்திருக்குஞ் சடத்துருக்க[6]மதனுட்புக்குச்
சேறெறிகீழ்க்குளங்கலக்குஞ் சேக்[7]கள்போலத்
திண்மைசெறி நோயொருத்தல்[8]குடியாய்ச்சேர்ந்து
மாறெழுந்து கலக்கிடில் யான்மற்றென்செய்வேன்
மனவொடுக்கத்துடனினக்கு வருந்தேனெலம்
ஆறுதருசுகமரணமதுதா தந்துன்
அரியசிவந்[9]தாமுதல்வா வப்பாயேசே. ௧௫

குறும்ப[10]ரெனக் கொடுநோய்வின் குடியாளுக்குக்
கோட்டாலை[11]யுடனிறத்தல் கொடுமையாவும்
உறும்பரிசிலறஞ்சிறக்கச் செங்கோலோச்சு
மொருகுடையாய்ப்பார்த்திருத்தலொண்மையாமோ
பெறும்பயன்கடந்திடுமோ பிணக்கர் துட்டர்
பேதகர் நிக்கிரகத்திற்குப் பெருமையன்றோ
நறுங்கமலத்தாண்மருவ நாயேன் வேட்டேன்
நல்லசுகமரண பாகல்கென் யேசே. ௧௬

1, மோட்சம். 2. குயவன். 3. பூமி. 4. உடம்பு. 5. கண். 6. கோட்டை. 7. எருது. 8. எருமைக்கடா. 9 முத்தி. 10. குறுநிலமன்னர். 11. துன்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்த்தாண்டன்[1]ஒருடமெனு நாழிகைத் தி
வரி[2]யெனுமென் னுயிரை நல்வரிசையாகச்
சேர்த்தளந்து கலையாக்கச் சிறிதுகாலஞ்
செலவிருக்குந் திறமறிந்த கிரமஞ்செய்து
ஆர்த்திரதா னருணையென வந்துபோது
மருப்பலநோய் பகுத்தறிந்துக்கோமேயாக்கப்
பார்த்திருந்த வினைக்குழுசோ பண்பார்முத்தி
பதத்திடமுனை சுகமரணம் பகர்ந்தியேசே. கஎ

பாடிறுவார் பரிப்பர் பட்டமென்றுபாரோர்
பகர்ந்த முதுமொழி சிறிதும் பழுதறமற்
கேடறுகாக் கேவலமாக் கிரீடஞ்சூடக்
கிருதார்த்தனேலெனளிறுங் கெழுமுபன்றோய்
ஆடுபெரும் பம்பரம்போ லென்னையாட்டி
யடிப்படுத்தாமுன மருட்கைகொடுத்தாண்டேரும்
தேடரிய பரமபத தியாகஞ்செய்யச்
சிந்தைகொண்டு சுகமரணந் திருவியேசே. க.அ

கோதண்டஞ்சாத் துறவர்கோலக்கண்டு
குலைகுலைந்து குருவி கலைக்கேடிடறப்போற்
றீதண்டுரோகமுறாத் திகில்கொண்டுள்ளம்
திடுக்கிடவைப்புலக்கலையத் திசைபாமுன்னர்க்
காதண்ட வெண்றேலம்படாத்ர கண்ணான்
கடையெனறு மெனையொருகாற் [illegible]டாதோ
மூதண்டநாயகனே முத்திசேர்க்க
முன்பு சுகமானைத்தா முதல்வா யேசே. க௯

வழித்துணையென் றுடன்சென்றார் வனவிலக்கு
வந்துக்கண் டவரவரே மார்க்கந்தப்பி
யொளித்திடல்போ லுடனமர்ந்த வுற்றார் மற்றோர்
ஓர்முக்காய்ப் பிணிப்புலிவ துடற்றக்கண்டாத்

---

1. சூரியன். 2. நெல். 3. மோட்சம்.
4. பேறுபெறுவோன். 5. வில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணைத்தோடிப் பறப்பாரே கணைக[1]ளுவார்
கையடையீவா ரெவர்நோய் கலக்காமுன்னர்
விழிக்கிலக்காய் விரைந்து சுகமரணந்தந்து
விண்ணுடுந்தா நீயென்விமலாயேசே. ௨0

வாட்டமுற்றே னுலகிலினி வதியேன்முத்தி
வடிவாகப் பழுத்தவெற்கு வசுதை[2]வாழ்வில்
நாட்டமென்ன தடாகஞ்சேர் நளின[3]மேவு
நல்லிலைமே னீரதென நடித்துவாழ்ந்தேன்
ஆட்டமெலாமாடியெய்த்தே னணிந்தவேஷ
மனைத்தையு மொவ்வொன்றாக வவிழ்த்தேன்கால
நீட்டமதில் விட்டுவிடாய் நின்மேல்வீட்டில்
நேயமுற்றேன் சுகமரணநேர்வையேசே. ௨௧

தண்டிகைதேர்பல்லாக்குச் சமைக்கவேண்டேன்
சம்பிரமதோரணி கொட்டுஞ்சத்தம்வேண்டேன்
ஒண்டொடியார்மார்பையடித் தொடிக்கவேண்டே
னுற்றார்கள் புலம்பியழுமோலம்வேண்டேன்
கண்டவர் கண்ணீர்ததும்பிக் கரையவேண்டேன்
கனிந்துருகி நேசர்கடாங் கலக்கவேண்டேன்
தொண்டனேன் பலநாளாய்ப் பாயல்சோராச்
சுகமரணந்தந்தின்று சுவர்க்கம்யேசே. ௨௨

பன்னாளாய்ப் பாயலதிற் படுத்துத்தொய்ந்து
பார்த்தவர்கள் பரிந்திடநோய்படுத்தும்வாதை
என்றுமோர்தாழ்மையுந் தாங்கவேலா
தினறவனேமெனத் தரிதந்தெழுந்துவந்து
பொன்னுருர் திருவருளாம்போர்வைபோர்த்துப்
புனிதசுகமரணசிவம் பொருத்தித்தாராய்
மின்னூர்சிங்காதனமாய் விண்கொண்டாளும்
வேதாந்தவுட்பொருளாம் விமலாயேசே. ௨௩

---

1. ஆதரவு. 2. பூமி. 3. தாமரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணமெனும் வாயில்வழிப் புகாமல்மேக
மண்டலத்தில்வந்தாதம்வதியச்செய்து
அரணி[1]யுறுந்தியெனநின்னோடேயாற
வண்றொர்பத்தன்றனையழைத்தாயல்லாலேற்ற
தருணமதிலடியர்பலர் தம்மைவாதை
சருவாது வானழைத்தாய் தமியேன்றன்னைக்
கரணமொடுக்கிடுநோயாற் கலக்குவாயோ
கருதுசுகமரணந்தா கதிதாயேசே. ௨௪

அகரமுதலௌகாரமந்தமாகி
ஆறிரண்டா மச்[2]செனுமட்சரங்கண்மற்றைக்
ககரமுதன்மெய்களுடன் கலந்தாலென்னக்
காசினியெங்குங்கலந்தங்கதனைக்காக்கும்
பகவானே பத்தர்கள்வத்சல[3]னேபாழாம்
படிவமிதைச்சுமந்தபரிபவம்[4]போதாதென்
றிகழும்பன்னோய்ப்பாரந் தராய்பேரின்ப
மெனக்குத்தா சுகமரணமீந்தென்யேசே. ௨௫

வாயுவின் சத்தியிலெழுந்து மாக[5]மேறும்
வானரதம்போலுலகுமுடலமாயப்
பேயெனுமிம்மூன்றுமெனைப் பிரபஞ்சம்மாம்
பெருந்தேரிலேற்றி யெரிப்பிலம்[6]வீழ்த்தாது
தாயெனமுன்றடுத்திட்டாய் பிணிகள்சாடச்
சலிப்பின்றிப் பார்ப்பாயோ தாசனேற்குத்
தூயசுகமரணமது தந்துசொற்கம்
சுராபரவத்தருவாயென்றுய்யாய்யேசே. ௨௬

இருந்தவண்ணம்ரோகமொன்றுமின்றித்துஞ்சும்
இன்பமதாஞ்சலாக்கியத்திற் கிப்பூமீது
அருந்தவந்தான் யான்புரிந்தே னல்லேனாலு
மாற்றொணாப் பெருந்துயரமதன்வாய்ப்பட்டு

---

1. தீக்கடைகோல். 2. உயிரெழுத்து. 3. தயை.
4. வியாகுலம். 5. விண். 6. பாதாளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்தவெனைவையாதே மனசுபுண்ணாய்
மறுக்கமுறப் பாயன்மிசை வளர்த்திடாதே
இருந்துசுகமரணமதா னின்பாற்சேர்ப்பை
தேவர்பணிநித்தசுத்ததேவாயேசே. உ௭

மலசலத்தினடுக்கிடந்து நாணம்மானம்
மருவாம லுதவிசெயமனுவிலாமல்
அலமலர்ந்தையோவென்னேயென்னேவென்று
அகதிகளாயிறந்தோர்தாமநேகர்க்கண்டேன்
சலதிநீர் கருணையுள்ளாய் தமியேனன்னோர்
தமதுநிலைபரமடையத் தனிவைக்காதே
உலகரிரங்கிட நோயாலுபாதிக்காதே
உற்றசுகமரணமுத்தியுதவென்யேசே. உ௮

கஞ்சிகடைவாய்வழியக் காங்காலோயக்
காய்ந்த பசித்தீபனம்போய்க் கசமேலாட
விஞ்சிமலம்பொசியவுடனிருந்தார்வெண்டா
வெறுப்படைந்து புறமகல மேனிநாறக்
கஞ்சமலர்முகம்வேறாய்க் கருகிவாடக்
கணநாளாய்வருந்தியிறந்தாரைக் கண்டேன்
குஞ்சையலைத்திடுங்ககம்போலன்புகூர்ந்து
கொடுப்பைசுகமரணசிவங் குரவாயேசே. உ௯

கிடந்தகான்முடங்கவந்த நண்பர்க்கோர்சொல்
நவிற்றாது நாக்குவிழ நவைதீர்சைகை
கிடந்தபடி காண்பிக்கச் சிறுநீர்கெம்பிக்
கிளராடைதனைநனைத்துக் கெடுக்கப்பாக்கர்
அடைந்தவர்க ளவமதிக்க வாவிசோர்ந்தார்
ஆயிரத்தாயிரவருள ரவர்போலென்னை
உடைந்தகலமெனப் பழிப்புக்குறவாக்காதே
உவந்துசுகமரணமுத்தியுதவென்யேசே. ௩௰



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணயனத்தீக்கொழுந்தி யடியார்பாசம் [சை
அனைத்தையுஞ் சுட்டெரித்தொழித்தங் கவர்நெஞ்
எரியதனிற்புடமிட்டுபொன்போன்மாற்றேற்றும்
ஈசரனே சென்மகன்மபவத்தாலெய்த்துப்
பரிபவ[1]முற்றிருக்குமெனைக் கடைக்கட்பார்வை
பாய்ச்சியருட்கடலாட்டிப் பாதுகாத்து
வருமொருநீ யந்தியத்திலுய்வாய்வையாய்
வழங்குசுகமரணசித்தி மகிபாயேசே. ௧௧

சுருதியுக்தியனுபவங்கள் சொற்பமேனும்
தோயாதசுமடர்தமுட்சுமடனேனின்
பருதிமுகதரிசனத்தைப்பெறுதற்பாலாம்
பக்குவமற்றேனெனினும் பரிந்து பண்டு
குருதிசொரிந்திரட்சணியங்கூவோர்க்கென்று
கொடுத்திட்டாயக்கொடையிலெனக்கோர்கூறு
தருதியென்றே னதற்கிசைந்தாய்கொடுநோய்ச்சாலம்
தவிர்ந்தசுகமரணபரந்தந்தாள்யேசே. ௧௨

வாதமொருபாடுலக்கச்சேற்பம்வந்து
வலிதாயோர்புறமிழுக்க வல்லபித்தம்
மீதெழுந்துமெய்யறிவைக்காய்ந்துவீறி
வீணுரைகள்கிளப்ப வன்னவிருப்பநீங்க
ஏதிதென்ன மோசமென்று கிளைஞரேங்க
இறந்தவர்தாம் பலகோடி யேழையேற்குச்
சாதக[2]மாஞ் சுகமரணந்தந்துன்திவ்ய
சந்நிதியிற்சாரவைப்பாய் சகேசா யேசே. ௧௩

உடலந்நாளனந்தக்கரண முருந்துண்டாக
ஓயாமல்செல்விழுவுமற்றையோச்சும்
படியொருவரீயோட்டி காத்திற்பற்றப்
பார்க்குறூஞர் நயனமழைபாரில்வீழ்த்த

1. வியாகுலம். 2. பயித்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியீருய்ச் சிரமுதலாய்த் தாங்கலாகா
அகோரமதாங் கொடுநோயா லாயுளெல்லை
முடிவுகொண்டார்பலர்க்கண்டேன் மோட்சலோகம்
முந்தமுன்றுசுகமரண முதல்வாயேசே. ௧௪

பலம்பிடித்தாற் பண்டிதனென்செய்வானென்று
பாரிலுள்ளோருரைப்பாரப்பான்மைநோய்
அவம்பிடித்தேன் றனைப்பிடித்துப் பன்னேயாட்டி
யாரிருந்தார் பரிகரிக்க நீயல்லாமல்
திவந்[1]தமறைப்பெம்மானே நின்னைத்தாழ்ந்தேன்
றியிடமராகாலேனுமிலத்திற்றங்க
உவந்திலேன் சுகமரணமுதவிமோட்ச
வரிமையுமந்தருவாயெற்குரியாய்யேசே. ௧௫

வாரி[2]யிலாழ்ந்திறந்தார்நோய்வருத்தமாண்டோர்
வன்கொலையினுன்மரித்தோர் நஞ்சான்மாய்ந்தோர்
ஆரெவரென்றெடுத்துரைக்கமுடியுமாமோ
அவர்தொகையளவிடமுமோராளாதாகச்
சேரவிடாவெவ்வருத்தமெனினுஞ்சிறித்
தீண்டவிடாய் சுவாத்தியமாய்ச் சீவித்தாலும்
சோம்பார் சுகமரணந்தரப்பார்நேய
நித்தியவீடுந்தரப்பார் நிமலாயேசே. ௧௬

கக்கமதுட் கன்னறவைத்துக் கால்போலோடிக்
கண்டவர்கின்றவர்கடமைக்கண்டெண்கன்று
புக்கதுவோவுங்களதுபுனல்[3]மென்றுள்ளம்
புழுங்கியழுமதியிலிபோற் பொன்னேயென்னுள்
எக்கணமுநீவதியவெங்குற்றுயென்
றிரக்கமுடன்றிரிந்தலைந்தேனின்னைக்கண்டேன்
துக்கமொழின்றனைப்பதத்தில்விழுந்தேன்றுன்பில்
சுகமரணந்தாவீடுசுயம்பேயேசே. ௧௭

---

1. உயர்ந்த. 2. கடல். 3. வயல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதித்தன்றன்னைமையமாகக்கொண்டும்
அதன்றிண்மைக்கவர்ச்சியி லுலவியாய்நின்றும்
சோதிபெற்றங்கிரகங்களேவமாய் நாளுஞ்
சுழல்வதுபோனின்னை மத்தியாகச் சுற்றி
ஆதரவுமருளொளியுமடைந்தேனென்ப
தறிந்திருந்துமகன்மறந்த வனேனேரென்னை
யதிலனுமிகழ்ந்துபிலிச்சிறைவீடேற்றாய்
இன்பசுகமரணமுத்தி யீயென்யேசே. ௧௮

துன்பமென்றமாற்றமது சுருதி[1]வீழிற்
றுணுக்கமுறுமுளமுடையேன் றனி[2]சூழ்ந்தற்றாற்
கண்பனிப்பேனெடுநாளாய்க் கட்டில்சாயிற்
காலந்தான்றள்ளுவனோ கருதாய்கொல்லோ
ஒன்பதெனும்வாசலவையொடுங்கிக் கட்டைக்
கொப்பாகயான்கிடக்க வுணக்குச்சித்தம்
என்பதுதான்வந்திடுமோ சௌக்கியமென்றே
இருக்குங்காற் சுகமரணபரமீயேசே. ௧௯

மதகரியின்முழக்கஞ்சேன்வயமா[3]வஞ்சேன்
மாசுண[4]மஞ்சேன் கொடுமாமருத்[5]துக்கஞ்சேன்
உதகமஞ்சேன் பிறபூதமுருத்துமஞ்சேன்
ஒன்னலருக்கஞ்சேன்மற் றுலகர்க்கஞ்சேன்
கதமுறுபேய்தனக்கஞ்சேன்கடுநோயென்றாற்
கையுடன்கால்பதறவஞ்சிக் கலறுவேன்சித்தம்
இதமுடனே ரோகமிலாதிருக்கும்போதே
ஈக சுகமரணம்வீடிறைவாயேசே. ௨௦

தூர்போக்கிக் கவடெறிந்து தூரத்தோங்கிச்
சூழ்ந்தவகலிடந்தாவிச் சொர்ணங்காய்த்து
ஆரார்க்குமருமருந்தாய் முதுமையாகி
அருமைகெட்டுச் சாய்விருக்க மஃதேநேராய்ப்

1. காது. 2. நோய். 3. புலி. 4. பாம்பு.
5. காற்று. 6. உக்கிரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரழிந்து பெலங்குறைந்து பெருமைகுன்றிப்
　பிதற்று வெறுந்தடியெனநோய் பிணக்கமையாய்
நேரமினிச்செல்லாது நின்மேல்வீட்டில்
　நேயமுற்றேன் சுகமரண நீதாயேசே. ௫௧

குறைவதிலாதுறவரன்பர் குழாமாயார்த்துங்
　குணஞ்சிறந்த பரிசனர்தாங் குழுமிச்சூழ்ந்தும்
அறைவசெய வாயத்தமான வாட்கள்
　அயல்புடையிற் சமுதாய[1]மாகநின்றும்
பெறுபயனென் றின்றியன்றாய் பிதாவேயென்று
　பெருங்குரலிட் டிறந்த பலபேரைக்கண்டேன்
குறுவெயர்வுகொளப் பிறர்க்குக் கொடிதாகத்தொல்லை
　கொடாதசுக மரணபரங் கொடுப்பாயேசே ௫௨

கோலெடுத்தமகனதுகண் குருடாமென்றிக்
　குவலயத்தார்மொழிவரந்தக் கூற்றுப்பொய்யோ
மா[2]லெடுத்தவுலகமதை மனக்கைகொண்டு
　மமதை[3]யுற்று மதிநயன மயங்கிப்போனேன்
பாலெடுக்கிக்கொடுத்திடு தாய்பகைத்தபாலன்
　பதைத்தாற்போற் பதைக்கவிடாய் பசும்புண்மேலே
வேலுறுத்ததெனநோயால் விருத்தனேற்கு
　வேதைதராய் சுகமரணவீடயேசே. ௫௩

கீரதனுட்பாசியந்த நீருட்டீரை
　நீட்டாமலந்தரத்தி னின்றுற்போல
ஆர்தாநின்மேலே நல்லன்பாம்வேர்வைத்
　தசையாம னில்லாமலலைந்துலைந்து
பார்தருபல்லாசையை முன்றூட்டைபண்ணிப்
　பாரப்பொருளைப் பின்றூட்டையாகப்பந்தித்
தோழிந்தானிவனென விட்டிடாதேவாஞ்சைக்
　கேற்றசுகமரணபர மீயென்யேசே. ௫௪

1. கூட்டம். 2. மயக்கம். 3. அகந்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலசலங்கழிக்கவெழும் பலந்தான்மாற
வயிறதொட்டி யமுதவன்னவாஞ்சைபோக
அலமலந்தபார்வையுடன் கண்பஞ்சாடி
அருக்கிடையினாளியங்க[1]ளநேகஞ்செல்ல
வலமிடம்வந்திருந்தவர்தம் மனசங்கையும்
வரவரவே சலிப்படைய மாய்ந்தபேரைப்
பலதரமுங்கண்டு மிகப்பயந்தேனென்மேற்
பரிந்துசுகமரணந்தா பரந்தாயேசே. ௨௫

சித்திரைசெய்திடுமமய நேயச்சேவன்
சீத்தவருண் டசனமுறு திமிடந்தன்னிற்
சுத்தமாய் வருத்தமொடு தொல்லையின்றிச்
சுகவானராய்மரித்த கருணருண்டு
சித்திரமாமோவியம்போற் செயல்பேச்சற்றுச்
சேடமின்றிக் கணமதனிற் செத்தாருண்டு
இத்தொகையுட்சேரவதிபிரதி[2]கொண்டேன்
ஈகசுகமரணம்வீ டுறைவாயேசே. ௨௬

மாதாவினுதரமதான் மண்மேல்வீழ்ந்து
மடியில்வளர்ந்திருந்து தவழ்ந்தெழுந்துமன்னும்
ஆதாரமுடனடந்து பால்யமாதி
அருமையதாம்பருவங்க ளடைவாய்த் தாண்டிப்
போதாது போதாதென் றுலகம்போற்றும்
போகங்களனுபவித்து வயசும்போந்தேன்
தாதாநின் செங்கமலபாதச்சார்பைத்
தாகித்தேன் சுகமரணந் தாதாயேசே. ௨௭

சித்தமிகப் பிரமை[3]கொளச் சயனந்தீர்ந்து
திடுதிடெனவெழுந்து தெருவீதிசென்று
மத்தனெனத் திசைமயங்கி மாறியோடி
மாருட்டத்துடன் சிலபேர்மாயக்கண்டேன்

---

1. நாள். 2. ஆசை. 3. மயக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகையுள்வைக்காதே யெல்லாஞ்சேமம்
  என்றிருக்குஞ் செவ்விசுகமரணமீந்து
நித்தியவீடதிற்சேர்ப்பை நீயென்றுதன்
  நிச்சயம்யானின்னடியனிமலாயேசே. ௨௮

கம்பிபிடை பின்புகட்டிக் காதல்கோடி
  கலைவிகலைக்காலமதிற் காடுமேடு
அம்பி[1]யுலாங்கடலாதி யிடமாராய்ந்தங்
  கடுத்தவர்த்தமானமனுப்பதிருரென்ன
இம்பர்நின்றுன்னம்பரத்துக்கெண்விண்ணப்பம்
  என்றகம்பியேற்றி நின்னேடிசைவாய்ப்பேசா
வம்பனென்று பிணிதாராய் முத்திவாசம்
  வழங்குமன்றுசுகமரணம்வள்ளால்யேசே. ௨௯

அம்புலி[2]யாம் வன்புவியை யரயிய[3]த்தில்
  அடுக்கிவைத்தபடிமக்கல[4]த்துள்ளாக்கிக்
கொம்படுத்த கூடமதைக்கொண்டு கொல்லர்க்
  கூவியெற்றுவிப்பிரென்ற கூற்றுப்போல
வம்புசெய்தென்னுடல்புகுந்த வலிதாம்ரோகம்
  வந்தவழியோடநின்றன் வார[5]த்தண்டாற்
றம்புறம்பாய்ப் பறக்கடித்துத் துயர்ந்தாராச்
  சுகமரணந்தாபரந்தா தூயயேசே. ௩௰

தாக்குவதும்பிர்த்துவதுங் கஷ்டக்துக்கித்
  துவமுதமூட்டுவதுஞ்சோலித்துங்கக்
காக்குவதும்பிரயாசை கணங்கொண்டகள்
  கடியாமலிராப்பகலாய்க் கருத்துள்வைத்து
நோக்குவதுமருமையிவை நொய்திற்செய்து
  றவல்வருத்தமகன்றிடுமோ நோயாற்பன்னாட்
சேக்கையிசைக்கிடந்துழந்தத் திராதெற்குத்
  திகழ்ந்த சுகமரணந்தா சிவந்தாயேசே. ௩௧

1. நாவாய். 2. சந்திரன். 3. நிலாமுற்றம்.
4. கண்ணுடி. 5. அன்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்ட[1]மதிலேற்றிவைத் தக்கருக்கிலென்ன
　காலகழுத்திற் கயிறுகட்டியிழுக்கிலென்ன
போட்டவிடநாய்நரிகள் புசிக்கிலென்ன
　பூலோகவிந்திரன்போல் ரதத்திற்போக்கி
நாட்டமதாயாசந்தி[2]தன்னைநாடி
　நரர்நூற்றுக்கணக்கினின்று நடித்தாலென்ன
ஆட்டமன்றி யான்மபயனுமோமோட்ச
　அரும்பதிதாசுகமரண மதன்பின்யேசே. ௫௨

பொருளிருந்தென் கிளையிருந்தென் புலவர்கூடிப்
　பூபாலன் குபேரனென்று போற்றிலென்
வருபுகழேதனைமறந்திம் மாயவாழ்வின்
　மகிழ்வேனோ பன்னோயான் மாழ்கவையாய்
குருபரனே தொழுபவர்தம் பவநோய்கோறுங்[3]
　கொற்றவனே நின்ற பதாம்புயமுங்கோலத்
திருவுருவு முளம்பதித்தேன் செகேசாதாதா
　சிறந்தசுகமரணசிவச் செல்வம்யேசே. ௫௩

நெடுங்காலம் வாழநெஞ்சினினையாதேனை
　நீணிலத்தினிறுத்திவைத் தண்ணேசம்போக்கி
அடும்படிபன்னோய்களையுமனுப்பிவிட்டு
　அன்பதனைக்கொல்லுவையோவகாத[4]னென்றும்
கொடும்பதகன் கோடணையன்[5]குரூரனென்றுங்
　கூசாமற்பேய்பணித்த குதலை[6]யென்றும்
படும்பாட்டின்மகிழுவையோ பருவம்பார்த்துப்
　பணித்திசுகமரணசிவம் பரனேயேசே. ௫௪

அருகிலிருந் தரவணைக்க வனையில்லாம
　லாருசந்தவிர்க்க மனையாளில்லாமல்
உருகியுளம்பரிய வுடனுதித்தாருற்றோர்
　ஒருவருமில்லாம லுயிரொழிந்தபேர்கள்

---

1. விறகு. 2. பாடை. 3. கொல்லும். 4. வஞ்சகன். 5. கொடியன். 6. அறிவிலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரையதன்கணனந்தமுண்டா லடியேன்றன்னந்
தனியனென மலங்குவனே நினதுதஞ்சம்
அரைநிமிடமேனு மெனையகலாதாக்கி
அருள்வைசுகமரணமுத்தி யையாயேசே. ௰௫

ஐயா நின்னடியாருக் கடியான்யானே
அகதிகளுக் காகாயர்துணையென் றுய்ந்து
வையகஞ்சொற்றிடுமே யென்னளவில்மாலும்
வகையதுதான் யாதனகம் வசையாக்கல்லோ
கையாமலென்கிளைஞர் கல்லென்றேங்கிக்
கலங்காமலிது தருஞ்சாவெனக்கதைக்க
மெய்யாய் நற்சுகமரணமருளி மேலாம்
மீளாநற்கதியதுதா விமலாயேசே. ௰௬

ஆகாயக்கோட்டைகட்டி மாதன்[1] தீமைக்
கடியான் மெய்யற்றவர்தமன்பன் வஞ்சன்
சீகாமனிலாதமரக்கலம்போ னெஞ்ச
வீதிநெறிவழி குறுக்காய்நிற்குநீசன்
ஆகார்க்குமித்திர னன்பற்றார்க்கின்பன்
அருளில்லார்மேன்மருள்வா னறங்கொல்வானென்
றீகாக்குமென்னுடம்பை நோய்வாய்க்கியா
இன்பசுகமரணபரமெனக்கீயேசே. ௰௭

கன்மவினைப் பாழ்ங்கிடங்கின் கரையைக்காணக்
கவன்[2]றுழன்றமாந்தருக்காய்க்கவன்[3]றன ளூர்தம்
சென்மமெடுத்தவனே நீ யெனக்காய்ச் சிவன்
தியாகஞ்செய்திலையோ மெய்ச் சிநேகமற்ற
அன்னியன்போ லிருக்கென்முன மனுகாயண்டாய்
அரும்பிணிகள் வாட்டவிடுத் தயனிற்பாயோ
ஞானமறையுமடிமுடிகாணுதோய் தூய
சுகமரணசொற்கந்தா தவந்தாயேசே. ௰௮

1. அறிவிலி. 2. வருந்தி. 3. கவலைகொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்காள¹மாய்ப் படிவமெலிந்துகாயங்
கான்முடங்கக் கரமடங்கக் ககித்துப் புண்போல்
அங்கமுற்றுய்நோவாஸ்லவணந்தீர
வடிக்கடிவிக்குள²தெழும்ப வகடு³றுத
மங்காதநயனவொளி மங்கிமாற
வாதாள சுரோத்திரங்⁴கள் மந்தமாகிப்
பங்குபங்காய்மரித்தவரைப் பார்த்தே தன்றுதா
பக்குவமார் சுகமரணபரமென்யேசே. ௩௯

பாயலுடனொட்டி யுருவாகிப்பஞ்சாய்ப்
பறையவென்று வாயெடுத்தும் பலன்றன்றேயக்
காயெரிமுன் பச்சில்போ லுயிற்காய்ந்து
கவனமதாய்ப் பன்முறையுங் கண்டநேசர்
சாயலறியார் மயங்க வுயிர்போய்ச்சாய்ந்த
சச்ச⁵னைவரைத்தாமறிவேன் சனங்கடோறும்
வாயினிறை ருமமந்தி மற்றென்றுண்டோ
வழங்குசுகமரணபரம் மகிபாயேசே. ௪௰

உச்சிமுதலடிவரைக்கு முன்றுமத்தை
ஒழுங்கொழுங்கா யிடைதலறு தொருங்குசேர்த்து
நச்சடித்துவைத்ததென வங்கத்துள்ளே
அமர்ந்திடச்செய்தனர்சலிது மவற்றைப்பல்கால்
உச்சரிப்பதல்லால் வேறொருவர்பேரை
யுரைசததுண்டோ நீயுரைத்தி யொருவரில்லாப்
பிச்சனெனமரிக்கவிடாய் பீடார்மோட்ச
பேறுடன்று சுகமரணம் பெம்மான்யேசே. ௪௧

நானெனதென் றகமமதைத் துவசகாட்டு
நாயகனுமினதருளை நகைத்துத்தள்ளி
வாணமுகநோக்காது வையவாழ்வில்
மயங்கினவன் பேயனென மனசன்வைத்து

1. உடல். 2. விக்கல். 3. வயிறு. 4. காது. 5. சற்சனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடினையுறுநோயனுப்ப வுள்கா[1]யப்பா
ஒருமுறைபோற் பன்முறைநிற்கோலந்தந்தேன்
தேனமுதங்கலந்தவின்ப சிவந்தாபுந்தி
தெளிந்த சுகமரணந்தா தேசார்யேசே. ௬௨

அன்பமுதிற் றுணைப்பாதங் காட்டுங்கால
அதனுவென் றுளங்களிப்பேன் சுகம்வந்தாலென்
அன்பனைநேர்கண்டருணமகன்றதென்றென்
றகங்குழைவேனெடுநோய்வா யதனுட்பட்டால்
என்பு தனித்தனிகழலவீரற்றிய
விருந்தாங்கவரும்வந்தா லியாதுசெய்வேன்
பின்பதென்று போடாதே பிரானே மீளாப்
பெருங்கதிதா சுகமரணமெலந்தாயேசே. ௬௩

விப்புருதியெனிலதனை விறலாய்த்தாங்கும்
வீரசத்தி யென்னிடத்தில் விளங்கவில்லை
செப்புசலரோகமொழி செவியில்வீழ்ந்தாற்
திடுக்கிடுவே னடுக்கமுற்றுத் தேகஞ்சோர்வேன்
இப்பெயர்த்தாம் பிணிநெருங்கிலியாதுசெய்வேன்
எற்கிரங்கி யாரவற்றையெனுலேற்பார்
அப்படிவாராதுசுகமரணந்தந்துன்
னடிக்கமலத்தருகிருத்தா யையாயேசே. ௬௪

உரோகமுறுதிருக்க வுளமுள்கினுலும்
உள்ளபடியாகுமலா துளம்போலாமோ
வரோகனையனுப்[2]பினைந்தகத்தின் மமதைகொள்ளேன்
மாநிலத்திற் சாட்டின்றி மரணமுண்டோ
சரோருகர்போதுலகிற் றங்கினோர்க்கும்
சாவதற்கோரற்பபிணிதான்வேண்டாமோ
உரோதனஞ்[3]செய்தழுங்கவிடா யுனதுவீடோ
டுவகைதருஞ்சுகமரண முதவென்யேசே. ௬௫

1. வினையாய். 2. வாத்தாற்பிறந்தவன். 3. அழுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றேயாயுயிர்க்குயிரா யமர்போல
ஒடுங்கிமனசடங்கிடுவா ருளப்போதேதி
நன்றேவீற்றிருந்தாசுபுரி யென்றுதா
னாலிலத்திலெனைமறந்தா னுய்போனீசன்
என்றேநின்னருட்கை முடக்காதே யின்றுட்
கெடுக்கிவளர்த்திடுதல்கட னிதுமெய்யன்றோ
கன்றேயா னிகறவை நோய்க்கெற்காட்டாக்
கருதுசுகமரணமுத்தி கற்பியேசே. ௬௬

சிற்றுசி[1]சகத்திரமொன்றுகச்சேர்த்து
திடுதிடெனவுண்ணூடி நாளந்தேடி
உற்றூர்ந்து மயிர்க்கால்கடோறுமோடி
ஓர்மமுடன் படைவகுத்துள்ளொளியாநின்று
குற்றுவபோற்றுன்னீர்கள் குயிறிக்குற்றக்
கூர்ந்தவுனைவெழுந்தயர்தி கொள்ளவாட்டச்
சற்றுமெனைத்தனிக்கவிடாய் சலசநேர்நின்
தாடாமுன் சுகமரணத் தருவாய் யேசே. ௬௭

உப்பதிட்டமட்பாண்ட மொப்பாமிந்த
உடம்புடைந்து மண்ணுகாதுளாளெல்லாம்
செப்பமதாய்ச் சீராட்டிவைத்தென்றேய்ந்து
சிறிதனைக்கச சிரங்குருட்டுஞ் சேற்பமாதி
அப்பியெனை விழுங்குமெனவச்சமுற்றேன்
அதற்குமுனெனுனமாவை யதிலினின்றேட்டித்
தப்புவித்துன் சாலோகஞ்சார்ந்து வாழுஞ்
சலாச்சியந்தா சுகமரணந் தாதா யேசே. ௬௮

எப்படியென்றுயுளர்த்த மாமேமாவென்று
விரவுபகலெண்ணியெண்ணி யினைவேனல்லால்
அற்பமும்யானிரங்கிடுதற்கஞ்சேன் மஞ்ச
மதிற்பன்னுட் கிடந்துபம்மையதியோடு

1. ஆயிரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பமலப்பெருங்கவலை யுற்றுச்சூழ்ந்தார்
தொல்லையை வன்சுமையாகச் சுட்டியன்றோ
அப்பனேயெனைநின்வீடழையென்றோல
மழுப்பினேன் சுகமரணமருள்வையேசே. ௬௯

பேதிளமையின்பமுடன் பிணிநீண்மூப்பு
பிறங்கிடுசாவென்றுலகர் பிரித்துப்பேசும்
ஆறிவைதாங்கருவிலுள வமைப்பானாலே
னல்லவெனிலென்னவையா வெனக்கென்றுமோ
நாறுடலமீதுட்புகுந்து நடித்துநோய்கள்
நலிவுசெயாதென்பேரி னயந்து மேலாம்
ஆறுதருசுகமரணமதுதாதந்தன்
அபவருக்கந்தா வருடாவையாயேசே. ௭௦

அநித்தமதாஞ் சகத்தைமெய்யென் றுணர்ந்தித்தோர்
அனுவளவுமறுமைதனை யகத்துள்ளாமற்
பணித்தரையிலேர்ப்பூட்டும் பதரற்கொப்பாய்ப்
பாழான பிரபஞ்சப் பற்றுவிஞ்சித்
தினைத்துணையுமுனைத்துதியாத் தீயநாயன்
சேட்டர்தமுட் சிரேஞ்சிதியனென்றுதீர
எனைத்தனியனுக்காதுன்பதவியீவை
இன்பசுகமரணமுடனேகதால்யேசே. ௭௧

தக்கார்மற்றவரிவர்தாந் தகாதாரென்று
தரம்பார்த்து முகம்பார்க்குந் தன்மைநின்னில்
எக்காலுமிலைதிவேனியாரஞ்ஞை[1]
யென்றனைநீயலட்சியமாயின்றுமெண்ணாய்
அக்கார[2]மெனினுமிற் சுவைக்குமாமோ
அடிமையென்றலருந்துயரமறுமோசின்னக்
கைக்குழந்தைபோலனைத்தென்காதநீர்க்கும்
கதியுடன்சுகமரணங்கருத்தாயேசே. ௭௨

1. அதிவிஷி. 2. சர்க்கரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்ச்சியர்[1] தன்கையுறு மத்தனைப்போற்றுங்கற்
கருமையதாம் ரோகமத்தில் வங்கத்தாழி[2]
போய்க்குடிகொண்டிருந்துழக்கிப் புடைத்துத்தாக்கிப்
பொருதிடராய் மனவுறுகண்[3]போதனையாய்
சீச்சியெனப் பார்த்தவர்கள் சிரிக்கச்செய்யாய்
சிந்தைதெளிசுகமரண செல்வந்தந்து
காய்ச்சியபாலெனப்போனிற்கலந்துவாழுங்
கருதருநிர்வாண[4]முந்தாகருத்தாயேசே. ௭௩

செக்கினடியகம்வீழ்ந்த கிறிதாறாவு[5]
சிறுமுசலம்[6]த்தாக்கிலுக்குச்சிதைவுறுதோ
சுக்கினதுகஷாயமயக் குய்த்தபேர்க்குத்
துவவுழ்தமாகிடுமோ இன்றுநோயின்
கைக்குளகப்பட்டவர்க்குக் கதிவேறுண்டோ
காத்தருகிலிருப்பவர்தாங் கரைசேர்ப்பாரோ
நெக்கியென்புருகிக்கரைந்து நிதனையாமல்
நேயசுகமரணகதி நீதாயேசே. ௭௪

தாய்வருத்தமடைந்திட்டாற் சனிக்குங்கர்ப்பஞ்
சௌக்கியம்பெற்றிடுமோமோ தருமமின்றி
நோய்புகுந்துபிடித்தொருவர்த்தாக்கினாலில்
அதனமோமனசிலுக்கு நொய்திலேனும்
வாய்மையதாமானந்தமுறுமோமாறு
மம்மர்[7]வாவாறுதலுமடிந்துபோமே
சேய்மையுறுய் தேகபசுபந்தந்தீர்த்துச்
சிவந்தருமுன் சுகமரணத்திருத்தாயேசே. ௭௫

ஓசையிலாதுடைந்தவெண்சங்கொளிர்நீறல்லால்
உலகருக்கு [illegible]தவுமோ மண்
ஆசைதனைவிளைத்தது[illegible]அறுத்துச்சாவுங்
கருணையருமன்யேறலாருக்கேனும்

1. இடைச்சியர். 2. குடம். 3. துன்பம். 4. மோட்சம்.
5. எள்ளு. 6. உலக்கை. 7. மயக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுமொருசபலமுண்டோ பிணத்தாலார்க்கும்
 பெறும்பயனுண்டோபிணியாற் பேய்போலாகிக்
காசவடையவையாதே கருணைவைத்தன்
 கதிக்குமுன்றுசுகமரணங் கண்டேனையேசே. எசு

தறிபட்டதருப்போலீள் சயனஞ்சாய்ந்து
 தலைநிமிர்த்திமெழும்புதற்குச் சத்தியற்று
முறிபட்டதெனவத்தி[1]முழுதுநோவ
 மூர்ச்சையுறச் செந்நீர் தண்ணீராய்மோதக்
கொறிபஃடசெங்கெலெனக் கோதேயாகிக்
 கோலமதுமாறுகிக் குணம்வேறுகி
வெறிபட்டபித்தனென்று விடாதேநாயேன்
 வேட்டசுகமரணமொருநின் வீடையேசே. எஎ

கொட்டியெனுஞ்சிறுபூண்டு குளநீர்வற்றக்
 கொண்டவுறவாலுருங்கொள்கைபோல
ஒட்டியவென்கிளைஞருலர்ந்தளஞ்சலிக்க
 உரோகவிராக்கதன்சிறையிலென்னையுய்த்தால்
வெட்டியதான்மீட்டெடுத்துவிடுவாருண்டோ
 விருதாவினரர்பாதம்வீழ்ந்திறுக்கிக்
கட்டியதிற்பயனென்ன கதிதானென்ன
 கவிக்கத்தா சுகமரணங் கதிதாயேசே. எஅ

தண்டவிளஞ்சிறுவர்கடாம் பரிந்துகண்ணுற்
 கனகவொன்றுக்கூற்றக் களவம்பூசும்
பெண்டீர்கள் மனமிரங்கிப் பிரலாபித்துப்
 பெருமூச்சுவிட்டலற வுற்றூர்பித்தம்
கொண்டவர்போலந்தோவென்றலறிக்கூவக்
 கொடும்பிணிசெய்வருத்தமதைக் கொஞ்சமேனும்
விண்டிசொலார் மிகக்கலங்கிவீயக்கண்டேன்
 வெருவினேன் சுகமரணம்வீடையேசே. எகூ

---

1. எலும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ககனமதிற்பறக்கவிட்டபட்டம்[1]கட்டுங்
கயிறுதரைக்கிழுக்கவுந்திக் காற்றுத்தள்ள
மிகவலைவுற்றிடைநடுவேயிதந்தவண்ணம்
விண்ணுலைசமேல்வாங்கவிபுலை[2]யாசை
தகவுடன்கிழ்வாங்கவுளச் சலனங்கொண்ட
தமியனையிச்சாங்காலமுரோகஞ்சாடி
அகமுலையவாட்டியடர்த்தழுக்கவையாய்
அளிப்பைசுகமரணமுத்தியத்தாயேசே. ௮௰

உன்னுபயபதசேவைபுரியவுள்ளத்
தோவாமலாசைகொளா துலகவாசை
தன்னைவைத்துப் பூசைசெய்து சந்தோஷித்த
சண்டாளப்பாவியென்று தமியேற்றன்னாய்
இன்னேயென்றரிசனத்துக்கெதிராய்வாராய்
இன்பசுகானந்தநிருவாணமீவாய்
பொன்னேகண்மணியே புத்தேளிர்[3]போற்றப்
பொருவில்சுகமரணந்தா புனிதயேசே. ௮௧

விம்மலுடன்பொருமலுற்று விதனங்கொண்டு
மேவினருமித்திரருமெய்தாருஞ்சோர்ந்து
அம்மாவென்றரற்றியளப்பிணிகாளாண்மை
அடியேனிற்காட்டலுமக்கழகதாமோ
சும்மாவோர்வீணனெனத் துணியிர்தேவ
தொண்டருக்குத்தொண்டனியான்றூரநிற்பீர்
பெம்மானே சுகமரணப்பேறுதந்து
பின்றுதாபெருமோட்சபேறென்யேசே. ௮௨

வேதாளவிக்கிரகத்தொழும்புவேட்டு
வீணருடன்வீணனெனத்திரியும்வேலை
நீதெனவேவீக்கிவிட்டுன்பாதசேவை
செய்தவெனைப் பிணிச்சிறையிற்றிணித்துப்பூட்டி

1. கடதாசிக்கொடி. 2. பூமி. 3. வானோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவுசெய்யாமலனிகாட்டாமல்
ஆனபடியாகட்டென்றகலகில்லாய்
நீதியொருகரமென்றுன்னருட்கைநீக்காய்
நேயசுகமரணபா நிதிதாயேசே. ௪௩

ஒன்றுபலதொண்டமைத்துக்குருவாயுன்னை
உளநிறுத்திப்பூசனைதா னொழுங்காய்ச்செய்தேன்
கொன்றனைநீங்காற்றிடினுங்கொண்டான்றன்னைக்
குவலயத்திற்புறக்கணிக்குங் குணவானன்றோ
குன்று[1]தலைக்கொண்டிருக்குரீஇ[2]யைப்போலக்
குறுகுறென்றுநோய்நகிக்கக் குறிப்பாய்ப்பார்த்து
என்றும்போற்றாரநிலாயின்பமுத்தி
ஈயமுணருஞ்சுகமரணமீயென்யேசே. ௪௪

இருட்டறையிற் றடவியத்தமினைத்தாவெனப்பாய்
இகத்திலெனை ஆளத்திலடியிருந்தபோதும்
மருட்டுறையிற்படிந்து பரவாசனைக்கே
மாண்புதருங் கைவல்யவாழ்வெங்கென்று
பொருட்டெரியான் றடவிமதிபோனேனென்று
பொருதடர்க்கப் பிணிகள்குடிபுகுதவிட்டு
அருட்டுறைகாட்டாதகல நில்லாய்மோட்சா
னந்தந்தா சுகமரணமதுதாயேசே. ௪௫

நாணறியத் தினங்கள்பல நல்லாகாரம்
நாவதில்லையாது மிகவலிர்துகான்வாழ்
மானிகர்கண்மடவரல்க ளுடனன்மைந்தன்
மகண்மருகிமருங்கதனில் மாழ்கிநிற்கத்
தேனுறழுநேசரழத் திரேங்கச்
செத்தபத்தரிலரோநோய் செயித்தாருண்டோ
பேணியொக்குஞ் சிறுகாலப்பிரிவும் பித்தாய்
பிரியசுகமரண முத்திப்பேறீயேசே. ௪௬

---

1. மலை. 2. குருவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலையிட்டுச் சிறுகரும்பை யாட்டல்போல
அல்லி[1]யுடன் றிவா[2]ப்பலவாயடர்பன்னோய்கள்
வேலைபிரிதொன் றுமின்றி யென்னை வீட்டும்
வேலையதேவேலையதாய் விறைவுகொண்டால்
ஓலமிடா திருப்பேனோவுனைக்கெஞ்சேனோ
ஒருநாட்போற்பன் னாளாயுழலுறக்கம்
சாலவிலா திருக்கவையாய் முத்திசாரத்
தனையபுரிவாய் சுகமரணந்தருவாய்யேசே, ௮௭

ஒருகலைக்கோர் கண்டமென்று சொல்லுந்தீங்க
ளொன்றின்மேல்பலவென்று சொல்லுவாரோ
தெரிசனஞ்செய் நயனமங்கச் செவிடுமண்டத்
திரமான நடையழிந்து செயலுங்குன்ற
வரவரக் கால்கரமுடங்க மனந்தான்மாற
மால்[3]கதிக்க ரோகமது வந்துகூடித்
தருமமறச்சாடிலெற்குத் தஞ்சம்வேறார்
தாவில்சுகமரணபாக் தாதாயேசே. ௮௮

கொதுகினுக்கு நீரழிவுக்கொடுமையோடே
குருசுமுறும் பிளவைவரிற் கொதுகென்செய்யும்
முதுவயசான்மெலிந்தவரைப் பிணமென்றூடி
முனியுமெனிற்செய்வதென்முதியென்சாலச்
சதுரனலேலுறுபிணியின் றசனன்றே
தாசரைநோய்சயிக்கவிட றருமமாமோ
விதிவலிதென் றனநேற வின்னருளைவேட்டேன்
விருப்பொடுநற்சுகமரண விடயேசே. ௮௯

கிருமிகுடிபுகுந்துபல்லிக் கிளைக்கும்பாண்டங்
கேதமுறுதொருதினம்போற் கிளர்த்தும்பல்லாண்
டருமைபெறவளர்த்துக்காத் தழகாய்வைத்தேன்
அவ்வருமையென்னளவு மகங்கொளாமல்

1. இரா. 2. பகல். 3. மயக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபதத்தவிராக்கதனை யென்னச்சீதி
யிதரபிணிகூட்டடங்கலோய்ந்தொன்றாகித்
திரிகையின்மாவெனவரைத்துச்செயிக்கமுன்னர்ச்
சிறந்தசுகமரணமுத்தித்திருத்தாயேசே. ௬௦

மாயாவியொருவன்செய் மகேந்த்ரசாலம்
மாந்தர்கடம் மனசுகளைமயக்கல்போலப்
பேயாமிப்பிரபஞ்சம்பிடித்தெனுள்ளம்
பிரமைகொளச்செய்ததனுற் பேய்போலாகி
ஓயாமலிந்நாட்காறலைந்தே னுன்றன்
ஒப்பறுஞானப்படையா லுளம்வெளித்தேன்
ஆயாவிக்கடைக்காலந் தனிலுமாமுன்
சுகமரணசொர்க்கந்தா தோன்றல்யேசே. ௬௧

குப்புறவெசிரசுருத்திக்குதித்தாலென்ன
கொடிபூட்டிப்பிடித்துநின்றுகுழறிலென்ன
அப்பாவென்றூர்ப்புடனே யரற்றிலென்ன
ஆ ஆ வோ வெனப்புலம்பியழுதாலென்ன
தப்பாமற்பூனையின்வாய்த் தத்தை[1]யொப்பத்
தமியேனைப் பிடித்தபிணிதான்றிரும்போ
ஒப்புவமையில்லாயுன் பதவியுள்கி[2]
ஓலமிட்டேன் சுகமரணமுதவாய்யேசே. ௬௨

வீக்கங்கொண் டுடலமெங்குமினுமினுத்து
வெடித்தமுகளீர்பாய்ந்து விரலினுர்தம்
மூக்கையறப்பழுதாக்கி முன்னேசென்று
மொய்த்தவரையகல்க்குமுடைசேருத்தவத
ஆக்கையிதாலதிற்பன்றேய் புகுமேவந்தோ
அவைபுரியுமதியாய மறையப்போமோ
காக்குமுள்ளநினக்குளதேற் கண்ணுய்க்காத்துக்
கருது சுகமரணமுடன்கதிதாயேசே. ௬௩

---

1. கிளிப்பிள்ளை. 2. நினைந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்கை குத்தியலைத்திருத்துங் கவ்விபுண்ணுங்
கனேபர¹த்தையல்லுடனெற்கழுவிச்சுத்தம்
ஆக்கிவைத்துப்பூசித்துச்சீயேற்றுளும்
ஆலயமாப்பேணிவைத்தே னத்தைப்பன்றேய்
ஊக்கித்தம்முறைவிடமாயுவந்துபற்றுவர்
ஒழிவ்கிடுபன்னுசம்போ னூற்றிச்சேறித்
தாக்கனுற்றுற்றுங்குலன்னமதமியேற்குண்டோ
தருகசுகமரணமுத்தி தாதாயேசே. கச

தங்கபற்பம் வங்கபற்பம் தாளப்பற்பம்
தாம்பிரத்தின்பற்ப மரிதாரப்பற்பம்
இங்கிவையோடேலாதிகடுகமென்னும்
எம்மருந்திலெனும்பலநோய்பிரிந்துபோமோ
அங்குமிக்கும் வியாபகமாய் நிறைவோயாற்று
அருங்கொடுநோய்க்காளாகியழப்பண்ணுதே
சங்கையுறாய் தாசன்னுளிசன்னியே
தருகிசுகமரணமுத்தி தந்தாய்யேசே. கரு

நோய்கொண்டார் பேய்கொண்டாரென்றுனலோர்
நவன்றனர் பற்பலபிணிக ளுழைந்துதத்தம்
வாயக்காத்துட்சென்றுல்வமலம்²ஞ்செய்யு
மருத்தன்டோ கண்டாபிஷேகம்வாங்கி
நீயுண்டா னீங்கிநின்றுரென்றார் நம்பென்
னினதன்பாந்தங்கமதை நீற்றித்தந்திப்
பேய்கொண்ட வானுளைப் பிரித்துமுத்திப்
பெருமிதந்தா சுகமரணபெலர்தாயேசே. கசு

வஞ்சனைக்குப் பிறப்பிடமாய் மாயம்விஞ்சும்
வையகவாழ்வெனுமவின் மயங்கிவீழ்ந்து
சஞ்சலத்தைத்தலைக்கொண்டான்சாலுக்கேறிச்
சட்டெனவே முழுஞ்சறுக்குந்தாசனென்றே

---

1. உடல். 2. சத்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சமுந்தன்னைவிகாட்டாய் பிடார[1]க்கூறும்
கொள்ளைகொள்ளையாநோய்கள் கூடியொன்றாய்
எஞ்சலின்றிமுனியமுன்வா லையாவென்று
விளித்தழைத்தேன் சுகமரணபரமேயேசே. ௯௭

தேகிதனையுணராது தேகந்தானே
தேகியென்றுநினைந்ததற்குத் தினமும்பூசை
வாருடனே செய்துவந்தேன் மகத்தாகின்றன்
மறைமொழியால் விகற்பமறத் வகுத்துக்கண்டேன்
பாக[2]னைநின்றுபதேசவாக்காற்பண்பார்
பரிபக்வனுகநின்னைப் பணிந்தேன் பாத
கோகனக[3]கொம்பிம்பின்பாலென்னைக்கொல்லாய்
குலவுசுகமரணமுத்தி கொடுத்தாள்யேசே. ௯௮

பழுத்தபழங் கொம்பினிடைப் படியாதென்று
பண்டிதருமன்னவரும் பத்தர்தாமும்
அழுத்தமதாய்ச்சாட்சியிட்டா ரினியென்முத்தி
யறப்பழுத்துக்கனிந்தேனில்லையென்றும்
கொழுத்தகொம்பிற்றங்கிநிற்குங் கோலங்காணேன்
கொம்மெனவே ரோகமது கொடிதாய்த்தள்ளி
விழுத்தியுடைக்காதுசுகமாணம்வேட்டேன்
விருப்பமுடன்றந்தனது விடையேசே. ௯௯

கும்பிட்டேன் பதம்பணிந்தேன் குருவாயுன்னைக்
கொண்டாடிப்பின்றொடர்ந்தேன் குவலயத்தில்
நம்பித்தேவனவேற யொருவர்நாமம்
நானறிய வென்றுநவின்றதில்லைக்
கும்பிக்குவிறசாக்காய் குரூரநோயின்
கூர்ந்ததந்தவிரையாக்காய் கொடியன்கொண்ட
நம்பிக்கைக்கிரண்டுசெயாய் நாயேனச்சும்
நல்லசுகமரணசித்தி நல்கென்யேசே. ௧௦௦

1. வைத்தியரால். 2. பால். 3. தாமரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்மைபடதாந்தருக்கனன்குழுத்தச் காய்த்தப்
பொன்போலும் பழம்பழுத்தப்புலியோர்க்கிய
நன்னயமாய்க்கோமளங்[1]கள் பாவொய்நல்கி
நரர்க்குபகாரம்புரிய நாளுமெலாம்
சென்மமெடுத்திருந்து மபகாரஞ்செய்தன்
சேவடிக்குஞ்சேவைதராத் தீம்பனானேன்
என்னவெனைத்தனாதுசுகமரணமீந்தன்
இன்பசுகானந்தநல மீயென்யேசே. ௧௦௧

கீட்டைநிதங்காத்தவர்கடளரவீதி
பிருபலமாயவரைத்தவர்கள் சுழன்றுவீழக்
காட்டும்ருபலகனிகள் கம்மவீதிக்
கதவடைக்க வாதுமைகள் கவிழுய்ப்பூக்கப்
பூட்டுவிட்டுச்சாலுடைய மண்மண்போலப்
போகுமிதுதருணமதிற் புகைர்துபாய்ந்து
மூட்டிவிடரோகசிந்தம்பீருழன்று
முதன்மையதாஞ்சுகமரணமோக்கம்யேசே. ௧௦௨

என்னைநினைத்தருள்வையெனு மீனச்சோரன்
இதயமலரலர வின்றைக்கென்றோ
நன்னருளும் பரகதிசேரெனநவின்ற
நாதனைநீயலவோநேய் நவிக்காமுன்னம்
உன்றெடெனைச்சேர்த்திடென நலமிட்டேன்
ஒன்றேனுங்கேளார்போலொழுகுவாயோ
சின்னவர்க்குக் காலமின்றோதெய்வமின்றோ
தீர்க்கசுகமரணமிவத் திருத்தாயேசே. ௧௦௩

காய்ந்தபெரும்புத்காட்டிற் பசித்தகாலி[2]
கண்டபடிவீழ்ந்ததெனக் கறம்ச்சிறிப்
பாய்ந்துனைக்கிகோய்க்காலி பரிவற்றெனனைப்
பட்சணஞ்செய்திடத்துணிந்தாற் பரிதாபத்தே

1. பக. 2. பசக்கூட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாய்ந்தனியாங்கோலநுகொண் டதட்டியோட்டா
தயர்ந்துவெறுங்கையுடனே யமைவாய்நின்று
வாய்ந்ததுநற்காட்சியெனமகிழ்கொள்வாயோ
வழங்குசுகமரணமுத்தி மகத்வயேசே. ௧௦௪

மனக்கவலை பெலக்குறைவென் றுரைக்குமாற்றம்
மற்றெனக்குமமையாதோ மாறுநோய்கள்
உனக்குறவுயாமென்றோர்த் திரைத்தென்னுள்ளம்
உடைக்கவந்தாற்கவலேலோவுதகாறோயோ
சினக்காதேகுறைபகர்ந்தான் சிறியனென்று
சீறுதே கன்மலைத்தீண்டாதோகை
நினைக்காணுங்காதலது நித்தங்கொண்டேன்
நேர்சுகமரணபரநேசயேசே. ௧௦௫

அடிக்கடிக்கக் கந்துசமேலைதத்தாலென்ன
ஆகமதாந்தரையதைத்தம்மாட்சியாக்கி
நொடிக்குநொடிகிளம்பிப்பின்றணியுமாறு
நோயாலென்றனைப்பிணித்து நோய்போலாக்காய்
கொடிக்குக்காய்கனத்திடுமோ கொடியெனெஞ்சங்
கோவில்கொள்வாய் தாங்கலெனைக்கூடாதோ
மடிக்கவெண்ணாய் சுகமரணம்வழங்கிநின்விண்
மண்டலவீடழைப்பாயென்மன்னுயேசே. ௧௦௬

கபங்கக்கிவாத்தியுடன் செக்கீர்கக்கிக்
களமடைக்கக் கால்கரங்கள் கனக்கத்தேகம்
சுபஞ்சற்றுமில்லாது விறைத்துச்சோர்ந்து
இரும்பதுபோற்கிடந்த பின்னர்த்தஞ்சிறுரை
நிபஞ்[1]சற்றுமில்லாதுநிமலாகண்டேன்
நெடுகவிடாய் நின்கனங்கடுணையாய்நிற்கச்
செபஞ்செய்தேன் சுகமரணந்தந்துமுத்தி
சேர்த்தருள்வை தேவர்தொழுந்தேவயேசே. ௧௦௭

---

1. உவமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வச்சிரமாயாக்கைபெற்றார் வையத்தில்லை
மண்ணிலெழுந்தனவெல்லாமடிதலென்றும்
நிச்சயமாமஃதறிவேனேனுஞ்சாவை
நினைப்பதனாலென்னாவு நெஞ்சிலஞ்சேன்
அச்சோ[1]வென்னபிமானமாற்றாநோயால்
அறப்பறக்குமெனக்கலங்கி யதன்வாய்க்கென்னைப்
பட்சணமாயொப்புவியாவென்றுவாடிப்
பரவினேன்சுகம்ரணபரந்தாயேசே. ௧௦௮

ஆழ்கடலைத்தாண்டினாருக் காறுதாண்டல்
அருமையன்றென்றாருலக ரழுகிராதி
வீழ்பிணங்காளுன்றிடச்செய் விமலாநிற்கு
விவிதபிணிநீக்க லொருவேலையாமோ
கேளினோராருகிலுறப் பிடகர்கிட்டிக்
கிரமமுடன்பரீட்சித்துக் கிழேதாது
தாழ்வதற்றதெனுமா சுகமரணந்தந்து
சால்புமிகுசித்தியுக்தா தலைவா யேசே. ௧௦௯

வலிவந்தன் றிறுறுத்தும் மயக்கங்கண்டும்
வாகாசவன்னமுண்டும் மகிழ்ந்தும் சோர்ந்தும்
சலம்விக்கிநெஞ்சடைத்தும் மணஞ்செய்சாலை
தனிலடைந்தும் பெருமிதமாய்ச்சம்பாஷித்தும்
உலம்பாதுமௌனமாயுறங்கியும்நோய்
ஒன்றுமின்றி யொவ்வொர்சிறுச்சாட்டிலோய்ந்தார்
பலர்கண்டேனென்னை யெந்தநோயும்பாடு
படுத்தாது சுகமரணபரந்தாயேசே. ௧௧௦

சுரந்தோஷமுதிரசன்னிசொறிவும் வேண்டாம்
சோர்வுதருமதிசாரந் தொய்வும்வேண்டாம்
அரம்போலுமரிகிரக்கும் ரணமும்வேண்டாம்
அவதிதரும்வாயுவுடலையும் வேண்டாம்

---

1. இரக்கச்சொல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஞ்சர்துவாதமுடன் காசனோய்வேண்டாங்
கக்கல்பெருவிக்கலொடு கயமும்வேண்டாம்
சிரம்பற்றும்பித்தமொடுசேற்பம்வேண்டாம்
தெளிந்தசுகமரணந்தா சிவந்தாயேசே. ககக

கிராணிகுட்டம் வலிமாந்தங் கொத்துகாசம்
கேடுதரும் வாதவகை கிருமிகுன்மம்
பராவுவிஷபேதியத்தி சுரமிப்பாரோர்
பயந்துகெடிமண்டிடுநீரிழிவு பாண்டு
விராவுகின்றமகோதரம் வெம்பிளவைமேகம்
விவிதமதாஞ் சூலைகண்ணோ யெரிவுவீக்கம்
அராவுகடியாதிகளுக்கடிமையாக்காய்
அருள்வைசுகமரணமுட னமுதம்யேசே. ககஉ

சருகரிக்கரோமலாற் சாதவேதா[1]ச்
சந்நிதியிற்சென்று குளிர்சாய்த்தற்கேற்ற
பருவமுருனிதமிலைக்கும் பாவிரோராய்ப்
பாரொடன்னியொன்னியமாய்ப் பரம்பாராது
நிரயமதற்கிலக்கான நீசன்பேயன்
நிச்சயமென்றுன்னியெனை நீக்கிநோயாம்
அரவமுணவிடாது சுகமரணமும்பேர்
அபவருக்க[2]முந்தருவாயப்பாயேசே. ககங

உட்கனன்றுவெளிகுளிருமுதகம்போல
உளத்திடையிவ்வுலகினையுய்த்துறவுபூண்டு
கட்குமுனேபாசாங்கா யுன்னைக்காட்டுங்
கள்வனிவனென்றெனைநீ கழித்துக்கட்டாய்
புட்பிடிக்குமலவ[3]னெனப் பிணிகள்பூட்டிப்
போட்டெனுயிர் மாட்டிடுகிற்புறம்போய்நின்று
பெட்பதற்று வேடிக்கைபாராய் பீடு
பிறங்குசுகமரணசித்திப் பேறீயேசே. ககச

1. ஸ்ரீ. 2. மோக்கம். 3. பூஜை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருவிலிருதயபுளிதம் பொன்னின்பூச்சுப்
போலேனுமமையாத புன்மையேனைக்
கருவிலிருந்ததுமுதலாவிந்நாட்காறுங்
கருத்தன்குஞ்சினைச் சிறையுட் காத்தாலென்னச்
செருவினைக்குமலைசையுடன்பூசல்செய்து
தினம்புரந்தாய் நோய்புகுந்துதீரத்தோடு
சருவிவரிற்செய்வதறிந்தல்சரியோமுத்தித்
தலந்தரமுன்சுகமரணந்தருகவேசே. ககரு

தந்தமொடுகண்கறுக்கத் தாகமீறத்
தாலு[1]விழநாம்பெழுந்து சடமேற்றேற்றப்
புந்திகலைநதிவொளிக்கப் பொல்லாச்சேற்பம்
பொருக்கெனமுந்தூவியர்வை போதப்பீந்தம்
விந்தைதரும்பேச்செழுப்ப மூர்ச்சைவிஞ்ச
மேதினிவாழ்வொழிந்தவரை மேன்மேற் கண்டேன்
இந்நிலையென்றனக்குத் தராய்நோயில்லா
இன்பசுகமரணமுத்தி யீயென்யேசே. ககசு

விடப்பழக்கள்வழங்கிடினும் விருத்தாட்டி
விழைவுகொண்டுவளர்த்தவர்கள்வெறுப்பாயுள்ளக்
கடுப்படைந்தக்கறையுடனே கனையாரென்றூர்
காசினியோர் நிந்தித்தங்கறுக்கக்கைப்புக்
கொடுப்பனவாக்கோடிபவம்புரிந்தபோதுங்
குடாரம்போனோய்குடையுங் கொடுமைபார்த்துத்
தடுப்பதுதான்செயாதகன்று தவிர்ப்பாயோ
தருகசுகமரணமுத்தி தந்தாய்யேசே. ககஎ

அத்தியைதாஇத்திரந்தான் வனைகளாக்கி
அணியணியாய் நாடிநரம்பாநாரார்த்துப்
பத்தியதாய்ப்பேசிக்டோலபரவிவேய்ந்து
பராமரிக்கவியமானன்றனைப்பணித்த

1. நா. 2. அம்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரவீடதட்சோரப் பிணிகள்சேர்ந்து
திரவியநேர் சௌக்கியத்தைத் திருடிக்கொள்ள
உத்தரவுகொடுக்காதே யுன்னைத்தாழ்ந்தேன்
உதவுசுகமரணம்வீடொருக்கென்யேசே. ககஅ

விக்கிர1மாயன்முதலாய் விளம்புமாண்டு
மேவுமறுபாநுமொன்றின்மேலொன்றுகிச்
சக்கரமாய்ச் சமாப்திபெறப் பின்னர்ச்சார்வற்
சரங்கள்பல செல்லமுத்தித்தாகக்கொண்டேன்
நிக்கிரகானுக்கிரகா நீதாகாதா
நேமியில்யா னிறுஞ்சின்னுணிலக்கச்செய்யாய்
உக்கிரங்கொள்ளாய் கருணையதகமாட்டி
உபகரிப்பைசுகமரணமொளிர்விடியேசே. கககூ

இன்றேயென்சிவாந்தராளெனில்லார்
இன்றேயென்றனைமுடிவாயினைந்துகாலுள்
இன்றேயான்வீட்டைவிட்டுகொட்டிற்கு
ஏதிகொளின்றேயென்னினத்தார்கூடி
இன்றேநீரமைக்கைவிட்டேகின்றீரோ
என்றுசொல்விமார்பிலடித் திரங்குமோர்நாள்
இன்றேயென்றனையழைத்திடியெனயானேல
மிடுங்கடைநாளின்றெனுயிரேற்பையேசே. கஉ0

---

## வாழி.

யேசுசுதன்வாழி யெந்தையெகோவாவாழி
இதயபரிசுத்தமருளிறைவன்வாழி
பேசுதிருமறைவாழி பெரியோர்வாழி
பிரபலமாசுவிசேஷம் பிறங்கிவாழி
தேசிகர்தாம்வாழி செங்கோல்மன்னர்வாழி
திருச்சபைகள்வாழி கலைச்செல்விவாழி
ஆசில்சௌபாக்கியவெம்மரசிவாழி
அனவரதம்சுகமரணவபீஷ்டம்வாழி.

---

1. [illegible] பிறந்த வருடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. 15933

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A2 1/3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DANIEL POOR LIBRARY
JAFFNA COLLEGE©
A15578
ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org